DINAKARAN

5 JULY 2022

PAGE 2

# கியூட் நுழைவு தேர்வுக்கு விண்ணப்பிக்கும் தேதி நீட்டிப்பு

## புதுவை பல்கலைக்கழகம் தகவல்

**புதுச்சேரி, ஜூலை 5:** கியூட் - பிஜி நுழைவுத்தேர்வுக்கு விண்ணப்பிக்கும் தேதி ஜூலை 10 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து புதுச்சேரி பல்கலைக்கழக உதவி பதிவாளர் (மக்கள் தொடர்பு பிரிவு) மகேஷ் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

தேசிய தேர்வு முகமையால் நடத்தப்படும் பல்கலைக்கழகங்களுக்கான பொது நுழைவு தேர்வுக்கு (கியூட்-பிஜி) விண்ணப்பிக்கும் நாள் ஜூலை 4ம் தேதி இருந்தது. தற்போது ஜூலை 10ம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. புதுவை பல்கலைக்கழகத்தில் உள்ள முதுகலை பட்டப்படிப்பு மற்றும் பட்டயப் படிப்புகளுக்கான மாணவர் சேர்க்கைக்கு இதுவரை 2 லட்சம் மாணவர்கள் விண்ணப்பித்துள்ளனர்.

2022-23ம் கல்வி ஆண்டில் முதுநிலை படிப்பில் சேர விரும்பும் மாணவர்கள் கியூட்-பிஜி தேர்வுக்கு https://cuet.nta.nic.in/ என்ற இணையதளம் வழியாக ஜூலை 10ம் தேதிக்குள் விண்ணப்பிக்க வேண்டும். ஏற்கனவே விண்ணப்பித்தவர்கள் திரும்ப விண்ணப்பிக்கவேண்டாம். பல்வேறு முதுகலை பட்டப்படிப்பு மற்றும் பட்டயப் படிப்புகளுக்கு இணையதளம் மூலம் விண்ணப்ப படிவத்தை சமர்ப்பிப்பதற்கான கடைசிதேதி வரும் ஜூலை 10ம் தேதி மாலை 5 மணி வரையாகும். விண்ணப்ப கட்டணத்தை செலுத்த கடைசிதேதி வரும் ஜூலை 11ம் தேதி இரவு 11.50 மணி வரையாகும். இணையதளத்தில் விண்ணப்ப படிவத்தில் ஜூலை 12ம் தேதி முதல் 14ம் தேதி வரை திருத்தம் செய்யலாம். இத்தேர்வுக்கான தகுதிகள் குறித்த விவரம் புதுவை பல்கலைக்கழகத்தின் www.pondiuni.edu.in/admissions-2022-23/ என்ற இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்கள் https://cuet.nta.nic.in/ மற்றும் https://nta.ac.in/ ஆகிய தேசிய தேர்வு முகமை இணையதளங்களை தொடர்ந்து பார்க்கவும். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.